**செய்தி வெளியீடு எண்: 484** **நாள்: 11.08.2019**

# மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் பதவியில் திரு. மு.வெங்கையா நாயுடு அவர்கள் இரண்டாண்டு நிறைவு செய்தது குறித்து வெளியிடப்பட்ட புத்தகத்தின் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை 11.8.2019

**வருகை தந்துள்ள அனைவருக்கும் எனது காலை வணக்கம்.**

மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் திரு. மு.வெங்கையா நாயுடு அவர்கள் தனது வாழ்க்கை அனுபவங்களை தொகுத்து எழுதிய **"Listening, Learning and Leading"** என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்
**திரு பன்வாரிலால் புரோஹித் அவர்களே!**
மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர்
**திரு.அமித் ஷா அவர்களே!**
மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர்
**திரு.பிரகாஷ் ஜவடேகர் அவர்களே!**
**மாண்புமிகு துணை முதலமைச்சர்**
**திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**
வேளாண்மை விஞ்ஞானி
**பேராசிரியர் திரு.எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களே!**
ராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழக வேந்தர்
**முனைவர் கிருஷ்ணசுவாமி கஸ்தூரி ரங்கன் அவர்களே!**
முன்னாள் இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்

**திரு.கே.பராசரன் அவர்களே!**
**சூப்பர் ஸ்டார் திரு.ரஜினிகாந்த் அவர்களே!**
துக்ளக் பத்திரிகையின் ஆசிரியர்
**திரு.சுவாமிநாதன் குருமூர்த்தி அவர்களே!**
அப்போலோ மருத்துவமனையின் தலைவர்
**திரு.பி.சி.ரெட்டி அவர்களே!**
வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர்
**முனைவர் ஜி.விஸ்வநாதன் அவர்களே!**
**வருகை தந்திருக்கின்ற மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!**
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
பெரியோர்களே தாய்மார்களே
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.** – என்கிறது திருக்குறள்.

காண்பதற்கு எளியவராகவும், கடுஞ்சொல் பேசாதவராகவும் விளங்கும் அரசர் ஆளும் நாட்டை உலகம் புகழும் என்ற வள்ளுவர் பெருந்தகை அவர்களின் கூற்றுப்படி எல்லோரும் எளிதில் அணுகும்படியான எளியவராகவும், பள்ளி, கல்லூரி மாணவர்களையும், இளைஞர்களையும், பெண்களையும் கவர்ந்து இழுக்கக் கூடியவரும், எல்லோரும் விரும்பும்படியாக இனிமையாக பேசிப்பழகக் கூடியவராகவும், பாரத மக்களுக்காக அயராது பணியாற்றிக் கொண்டிருப்பவர் நமது மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள்.

“**உழைப்பே உயர்வு**” என்ற பழமொழிக்கு இவர் வாழ்வே ஓர் உதாரணமாகும்.

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் 1949 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி பிறந்த இவர், படிப்பது மட்டுமின்றி, ‘‘ராஷ்ட்ரிய சுயம் சேவக்’’ இயக்கத்தில் ஒரு எளிய தொண்டனாக சேர்ந்து தனது சமுதாயப் பணியினை துவக்கினார். பிறகு ஜனசங்கம், ஜனதா கட்சி, பாரதீய ஜனதா கட்சி ஆகிய கட்சிகளில் பல்வேறு பதவிகளை வகித்தார். பின்னர் பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக 2002 ஆம் ஆண்டு உயர்ந்தவர்.

2000 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை அப்போதைய மாண்புமிகு பாரத பிரதமர் திரு.வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சராக பணியாற்றினார்.

Later, during 2014, His Excellency Thiru Venkiah Naidu Garu worked as the Hon’ble Union Minister for Urban Development, Parliament Affairs, Information and Broadcasting, in the Government headed Thiru Narendra Modiji. On this same day in 2017, he became the Vice President of Indian Republic and in that capacity, Chairman of Rajya Sabha. He earned the respect of all the members of the House, irrespective of party affiliation, because of his friendly approach.

மற்றொரு நிகழ்வை நான் குறிப்பிட விரும்புகிறேன். **வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்–விம்கோ நகர் வரையிலான சென்னை மெட்ரோ ரயில் சேவையின் நீட்டிப்பு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில், நமது மாண்புமிகு அம்மா அவர்கள் பேசுகையில், “இந்த விழாவில் கண்டிப்பாக திரு.வெங்கையா நாயுடு அவர்கள் பங்கேற்பதற்கு ஏதுவாக நாடாளுமன்ற கூட்டம் நடைபெறாத நாளான சனிக்கிழமை அன்றுதான் நடத்தப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டிருந்தேன். இந்த**

**விழாவில் திரு.வெங்கையா நாயுடு அவர்கள் கலந்து கொண்டதில் நான் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்த மெட்ரோ ரயில் நீட்டிப்பு திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுத் தந்தது இவர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

மாண்புமிகு வெங்கையா நாயுடு அவர்கள், தமிழ்நாட்டின் உற்ற நண்பர் என்று நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறுவார்கள். அதே உறவும், அன்பும் இன்றளவும் நம் மீது வைத்திருப்பவர் மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி.நிறுவனம் டிஜிட்டல் உரிமத்தை பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் நமது மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள்.

மேலும், இவர் மத்திய நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தபோது, என்னுடன் இணைந்து திருமங்கலம் முதல் நேரு பார்க் வரையிலான மெட்ரோ ரயில் சேவையை 14.5.2017 அன்று தொடங்கி வைத்த நிகழ்வு எனது மனதில் இன்னும் பசுமையாக உள்ளது. மேலும், அன்றே தலைமை செயலகத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மத்திய திட்டங்களை பற்றி ஆய்வு செய்து, நமது மாநில திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதலை பெறுவதற்கு ஒரு பாலமாக செயல்பட்டவர் நமது மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மாண்புமிகு அம்மாவிற்கு பிறகும், மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கு இன்றும் மத்திய அரசிலிருந்து உரிய ஆணையை பெறுவதற்கு துணையாக இருந்து கொண்டிருக்கிறார்.

**“போற்ற வேண்டியவை உண்மை, உழைப்பு, உயர்வு**
**பின்பற்ற வேண்டியவை கனிவு, பணிவு, துணிவு**
**பேண வேண்டியவை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு”**

என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன் மொழிகளின் அடிப்படையில் இன்றும் மக்கள் பணியாற்றிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு பாரத குடியரசு துணைத்தலைவர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

பல ஆண்டுகளாக மாநிலங்கள் அவையில் உறுப்பினராக பணியாற்றிய அனுபவம், அனைத்து கட்சியினரிடம் நண்பராக பழகும் இவரது இயல்பான குணம், ஆகியவை தான் மாண்புமிகு வெங்கையா நாயுடுகாரு அவர்களை இன்று பாரதத்தின் குடியரசு துணைத் தலைவராக உயர்த்தி இருக்கிறது. அரசுப் பதவியை விட மக்கள் பணி என்பதுதான் முக்கியம் என்ற கொள்கை பிடிப்பு கொண்டவர் நமது பாரத குடியரசு துணைத்தலைவர் அவர்கள். ஏற்றுக்கொண்ட பதவிகளில் அனுபவங்கயையும், அறிவையும், அர்ப்பணிப்பையும் கொண்டு திறமையாக பணியாற்றி, அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றவர் நமது குடியரசு துணைத் தலைவர் அவர்கள் ஆவார்.

இவர், தமிழ்நாட்டில் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில், தனது உரையின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் தமிழில் உரையாடுவார். சமீபத்தில் சென்னையில் மாணவர்களிடையே பேசுகையில் தாய்மொழி கண் போன்றது என்றும், தாய்நாடு, தாய்மொழி மற்றும் பிறந்த ஊரை என்றென்றும் மறக்கக் கூடாது என்றும் ஒரு உயரிய அறிவுரையை கூறினார். வீட்டிலும், வெளியிலும் நமது தாய்மொழியில் தான் பேச வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிய இவர், **தமிழும், தமிழ்நாடும் தன் மனதிற்கு நெருக்கமானவை”** என்று கூறியுள்ளார்.

உலக அளவில் பல்வேறு நாடுகளிலிருந்து மருத்துவ சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் சென்னை மாநகரம் ஈர்த்து வருகிறது என்றும்,

மருத்துவ சுற்றுலாவில் தமிழ்நாடு ஒரு உயர்ந்த இடத்தை அடைந்துள்ளதாகவும், சென்னையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் நமது மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் பெருமையுடன் குறிப்பிட்டிருந்தார்.

சமீபத்தில் நடைபெற்ற இரண்டாம் உலக முதலீட்டாளர் மாநாட்டின் நிறைவு விழாவில் ஆற்றிய உரையில்

"Tamil Nadu is supremely rich in cultural heritage. It is a place that is close to my heart as well. I am very happy to learn that it is one of the best-performing states of India and has emerged as one of the most sought-after investment destinations.

I am glad to know that GIM-2019 has attracted substantial investments in Manufacturing, Infrastructure and Services.

It is worth noting that NITI Aayog has ranked Tamil Nadu as one of the front-runners in India on many socio-economic parameters." என மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**தமிழ்நாடு மற்றும் அதன் மக்கள் மீது இவர் வைத்துள்ள ஈடுபாட்டையும், அன்பையும், பாசத்தையும் காட்டுவதாக இந்த நிகழ்வுகள் உள்ளன.**

**இன்று வெளியிடப்பட்ட இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இவரது அனுபவங்கள், அனைவருக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அரசியலிலும், பொது வாழ்க்கையிலும் நுழைய விரும்பும் இளைஞர்களுக்கு இந்த புத்தகம் ஒரு வழிகாட்டியாகவும், கிரியா ஊக்கியாகவும் இருக்கும் என்று உறுதி கூறுகிறேன்.**

மாண்புமிகு பாரத குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் இந்திய நாட்டிற்கும், இந்திய மக்களுக்கும் தொடர்ந்து சேவை ஆற்ற அவருக்கு நீண்ட ஆயுள் அளிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

----

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9